ஜூன் 30... நள்ளிரவில் சுதந்திர சீர்திருத்தம்!

குர்சரண்தாஸ்



ஒரு நாட்டில் இயல்பாக விவேகமான செயல்பாடு நிகழ்வது என்பது வரலாற்றில் மிகவும் அபூர்வமான விஷயமாகும். அத்தகைய அரிதான சம்பவம் வெள்ளிக்கிழமை, ஜூன் 30 நள்ளிரவில் நிகழ உள்ளது. அதுதான் சரக்கு மற்றும் சேவை வரி எனப்படும் ஜிஎஸ்டி அமலாக்கமாகும். இந்த வரி விதிப்பானது ஏற்கெனவே மாநில மற்றும் மத்திய அரசுகள் விதிக்கும் 17 வகையான வரி விதிப்புகளுக்கு மாற்றாக ஒற்றை வரி விதிப்பு முறையாக அமலுக்கு வர உள்ளது.

ஐரோப்பா, அமெரிக்கா, பிரேசில், மெக்சிகோ, ஜப்பான் ஆகிய அனைத்து நாடுகளின் ஒட்டுமொத்த மக்கள் தொகையை விட அதிகம் கொண்ட இந்தியாவில் ஒற்றை சந்தை, ஒரே வரி விதிப்பு முறை கொண்டு வரப்படுகிறது.

இந்தியாவின் வரி சீர்திருத்த வரலாற்றில் இது மிகவும் முக்கியமான மைல் கல்லாகும். அதிகாரிகளின் குறுக்கீடு மற்றும் பலமுனை வரி விதிப்பு முறைகளை செயல்படுத்தி பார்த்துள்ள இந்திய மாநிலங்களில் இப்போது புதிய வரி விதிப்பு முறை அமலாக உள்ளது.

பிராந்திய கட்சிகளால் ஆளப்படும் மாநில அரசுகள் மற்றும் சிதறுண்ட அரசியல் கட்சிகளைக் கொண்ட இந்தியாவில் ஒருமித்த கருத்து எட்டப்பட்டு அதிவேகமாக வளரும் பொருளாதார நாட்டில் ஜிஎஸ்டி கொண்டு வரப்படுகிறது. இதன் பலன் இந்தியாவில் தொழில் புரிவதை எளிதாக்கும்.

எவரேனும் ஒருவர் இங்கு பொருளை விற்க வேண்டுமென்றால் அதற்கு மாநில விற்பனை வரி, மத்திய விற்பனை வரி, நுழைவு வரி, விற்றுமுதல் (டர்ன்ஓவர்) வரி, சேவை வரி, உற்பத்தி வரி, ஆக்ட்ராய், செஸ் எனப்படும் பல்வேறு விதமான வரி விதிப்பு களால் இந்தியாவை அதிக வரி விதிக்கப்படும் நாடாக உலக அரங் கில் சித்தரித்துள்ளது. ஆக்ட்ராய் எனப்படும் வரிதான் மிகவும் மோச மானது. உதாரணத்துக்கு டெல்லி யிலிருந்து லாரியில் சரக்குகளை மும்பைக்கு எடுத்துச் செல்ல ஆகும் நேரம் 35 மணியாகும். இதில் பயண நேரம் 20 மணிதான். எஞ்சிய 15 மணி நேரம் சோதனைச் சாவடிகளில் வரி தொடர்பான பிரச்சினைக்கு லஞ்சம் கொடுப்பது, அதிகாரிகளுடன் வாக்குவாதம் செய்வதற்கான நேரமாக வீணாகிறது.

நாட்டிலுள்ள 29 மாநிலங்களும், 7 யூனியன் பிரதேசங்களும் தொலைநோக்கு பார்வையில் வரி விதிப்பில் தங்களுக்குள்ள இறையாண்மையை விட்டுக் கொடுத்து ஒருமுக வரி விதிப்புக்கு ஒப்புக் கொண்டிருப்பது இந்திய அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான நிகழ்வாகும்.

தங்களது இறையாண்மையை நிலைநாட்ட ஐரோப்பாவிலிருந்து பிரிட்டன் விலகியிருக்கும் தருணத் தில் இந்தியாவில் அனைத்து மாநிலங்களும் யூனியன் பிரதேசங் களும் ஒரு முகமாக தங்களது இறையாண்மையை குவித்திருப் பது நம்மிடையே ஒளிந்திருக்கும் ஒற்றுமையை வெளிக்காட்டுகிறது. பொதுவாக கடினமானதை ஏற்க மறுத்து விவாதத்தில் ஈடுபடும் மனப்போக்கை கொண்ட இந்தியர் கள் இதை ஏற்றுக் கொண்டது ஆச்சரியமளிக்கும் விஷயமாகும்.

வெள்ளிக்கிழமை நள்ளிரவில் நாடாளுமன்றத்தின் மைய மண்டபத் தில் குடியரசுத் தலைவர், மத்திய அமைச்சரவை உறுப்பினர்கள், மாநில முதல்வர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜிஎஸ்டி கவுன்சில் உறுப்பினர்கள், முன்னாள் முதல்வர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பிக்க உள்ளது உண்மையிலேயே வரலாற்றில் மிக முக்கியமான தருணம்தான். 70 ஆண்டுகளுக்கு முன்பு சுதந்திரம் பெற்றபோது நள்ளிரவில் நிகழ்ந்த பிரம்மாண்ட நிகழ்வைப் போன்றதுதான் இது.

இந்த வரிச் சீர்திருத்தமானது இந்தியாவின் வர்த்தக உலகில் மிகப் பெரிய மாற்றத்தை உருவாக்கும். நிறுவனங்கள் ஒரே இடத்திலிருந்து பொருள்களை விநியோகிக்க முடியும். மாறாக தற்போது ஒவ்வொரு மாநிலத்திலும் கிட்டங்கி ஏற்படுத்தி சப்ளை செய்யத் தேவையிருக்காது. இதேபோல உற்பத்தியாளர்கள் தங்களுக்குத் தேவையான பொருளை எங்கிருந்து வேண்டுமானாலும் பெற முடியும். ஒவ்வொரு மாநிலங்களிலும் விதிக்கப்படும் குழப்பமான வரி விதிப்பு இனி இருக்காது.

டிஜிட்டல் மூலமான வரி தாக்கல் மூலம் விவரங்களை தாக்கல் செய்ய முடியும். இதன் மூலம் அதிகாரிகளின் குறுக்கீடு, கெடுபிடி குறையும். இதனால் போக்குவரத்து செலவு குறைவதோடு, சரக்குகள் விரைவாக உரிய இடங்களுக்குச் செல்லும். நுகர்வோருக்கு குறைந்த விலையில் பொருள்கள் கிடைக்கும். ஏற்கெனவே வரி செலுத்தியபடியால் வர்த்தகர்கள் மேலும் கூடுதல் தொகை வைத்து பொருள்களை விற்க மாட்டார்கள். வரி செலுத்துவோரின் எண்ணிக் கையும் அதிகரிக்கும். இதன் விளைவாக வரி வருவாய் உயரும்.

மிகப் பெரிய சந்தையைக் கொண்டுள்ள இந்தியாவில் எளிமை யான வரி விதிப்பு முறை காரண மாக அந்நிய நேரடி முதலீடுகள் அதிகரிக்கும். இவை அனைத்தும் பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கும். சர்வதேச செலாவணி நிதியத்தின் (ஐஎம்எப்) கணிப்பின்படி ஜிஎஸ்டி அமலாக்கம் காரணமாக இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு வளர்ச்சி (ஜிடிபி) 8 சதவீத அளவுக்கு உயரும் என்று குறிப்பிட்டுள்ளது. நீண்ட கால அடிப்படையில் வழக்கமான வளர்ச்சியை விட ஜிஎஸ்டி அமலாக்கத்தால் 2 சதவீத வளர்ச்சி அதிகரிக்கும் என்று மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லியும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய வரி விதிப்பு முறைக்கு மாறுவதற்காக நிறுவனங்களும் மிக அதிக அளவிலான செலவை மேற்கொண்டுள்ளன. ஜிஎஸ்டி அமலாக்கத்தால் தங்களது தொழிலில் மிகப் பெரிய பாதிப்பு இருக்காது என்று நம்புகின்றன. சரக்குகளைக் கையாளும் நிறுவனங்களுக்குத்தான் இதில் மிகப் பெரிய பலன். இந்தியா முழுவதும் லாரிகளை எளிதாக இயக்க முடியும். இருந்தாலும் புதிய வரி விதிப்பு முறை பல்வேறு குழப்பங்களைக் கொண்டு வரும் என்பதும் உண்மை. நிறுவனங்கள் ரிட்டர்ன் தாக்கல் செய்வது அதிகரிக்கும். ஒற்றை வரி விதிப்பு முறை என்றாலும் பல்வேறு வரி பிரிவுகள் உள்ளன. 5, 12, 18, 28 சதவீதம் என்ற அளவில் உள்ளதால் பொருள்களை பகுத்தறிந்து எவற்றுக்கு எவ்வளவு வரி விதிப்பு என்பதில் சிக்கல் ஏற்படலாம். இதனால் ஏற்படும் வரி தாவா பிரச்சினை நீதிமன்றத்தில் பல வழக்குகளாக தேங்கக்கூடும்.

ஜிஎஸ்டி முறையில் அதிக வரி விதிப்பு உள்ள நாடாக இந்தியா கருதப்படுகிறது. ஏனெனில் 18 சதவீதம் மற்றும் 28 சதவீத வரி விதிப்பு முறைகள் உள்ளன. இதற்குப் பதிலாக 20 சதவீதமாக இருந்திருக்கலாம்.

இதில் மிகுந்த கவலையளிக்கும் விஷயமே வரித்துறை அதிகாரி களின் மெத்தனமான போக்குதான். கம்ப்யூட்டரைக் கையாள்வது மற்றும் டிஜிட்டல் ஆவணங்களைக் கையாள்வதில் அவர்களிடம் உள்ள மெத்தன போக்கு ஜிஎஸ்டி அமலாக்கத்தை அவ்வளவு எளிய பயணமாக்காது.

நீண்ட நாள் கனவு இப்போது மெய்படச் செய்ததில் பலருக்கும் பங்கு உள்ளது. பல சமயங்களில் இந்த அரசு சர்வாதிகார போக்கில் நடப்பதாக விமர்சனங்கள் எழுந்தன. ஆனால் மாநில அரசு களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்த்து, நிதானமாக அரசியல் சாசன திருத்தம் கொண்டு வந்து, ஜிஎஸ்டி கவுன்சிலில் ஒருமித்த கருத்து எட்டப்பட்டு மாற்றுக் கருத்துகளுக்கும் இடமளித்து செயல்படுத்தப்பட உள்ளது. இறுதி யாக 10 ஆண்டுகளுக்கும் மேலாக இதற்கான உருவாக்கப் பணிகள் நடைபெற்று அதை சாதனை நிகழ்வாக உருமாற்றியுள்ளது.

குஜராத் முதல்வராக இருந்த போது நரேந்திர மோடி ஜிஎஸ்டிக்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஆனால் 2014-ம் ஆண்டு பிரதமரான பிறகு தனது கருத்தை அவர் மாற்றிக் கொண்டார். தனது அரசின் மிகப் பெரிய சாதனையாக அவர் இப்போது கூறி வருகிறார். சமீபத்தில் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் - மோடி சந்திப்பின்போது, அமெரிக்காவில் வரி சீர்திருத்தம் கொண்டு வர மிகப் பெரிய போராட்டத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ள தாக ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

மோடி அரசின் நிதானமான அணுகுமுறையை அவரும் கற்றுக் கொள்ளலாம். இந்த வரி சீர் திருத்தம் அமலுக்கு வரும்போது அது மோடிக்கு மிகுந்த தன்னம் பிக்கையை ஏற்படுத்தும். தொழிலா ளர் சீர்திருத்தம், நில சீர்திருத்தம் உள்ளிட்டவற்றைக் கொண்டு வருவதற்கு இது அடித்தளமாக இருக்கும். இதன் மூலம் இதுவரை செயல்படுத்தப்படாமலிருக்கும் தேர்தல் வாக்குறுதியான வேலை வாய்ப்புறுதியை செயல்படுத்தவும் இது தூண்டுகோலாக அமையும்.

gurcharandas@gmail.com

பெங்களூரு தமிழ்ச் சங்கத்தில் சாதி தலைவரின் படம்

● கர்நாடக தமிழ் அமைப்பினர் அதிருப்தி

இரா.வினோத்

பெங்களூரு

பெங்களூரு தமிழ்ச் சங்கத்தில் ஒரு குறிப்பிட்ட சாதியின் தலைவர் படம் வைக்கப்பட்ட விவகாரம் கர்நாடக தமிழர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பெங்களூருவில் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக பெங்களூரு தமிழ்ச்சங்கம் இயங்கி வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் ஒரு குறிப்பிட்ட சாதி சங்கத்தினர் தங்கள் தலைவரின் படத்தை தமிழ்ச் சங்கத்தில் வைத் துள்ளனர். இதற்கு பெங்களூரு தமிழ்ச் சங்கத் தலைவர் தி.கோ. தாமோதரன் உள்ளிட்ட பெரும்பான்மை நிர்வாகிகள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். இருப்பினும் ஓரிரு செயற்குழு உறுப்பினர்களின் ஆதரவுடன் அந்தப் படம் அங்கே வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தகவல் சமூக வலைத்தளங்களில் வெளியாகி, கர்நாடகாவில் வாழும் தமிழர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. எனவே கர்நாடக தமிழ் மக்கள் இயக்கம், இந்திய குடியரசு கட்சி, கர்நாடக தமிழ் எழுத்தாளர்கள் சங்கம், தென்னிந்திய சாக்கிய பவுத்த சங்கம் உள்ளிட்ட பல அமைப்புகள் இந்த செயலுக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக கர்நாடக தமிழ் மக்கள் இயக்கத்தின் தலைவர் சி.ராசன் கூறும்போது, "சுதந்திரத்துக்கு முன்பு இருந்தே கர்நாடகாவில் லட்சக்கணக்கான தமிழர்கள் சாதி, மத பேதமில்லாமல் வசித்து வருகின்றனர்.

தமிழ் மொழியையும், பண்பாட்டையும் பரப்பி வருகின்றனர். அண்மை காலமாக தமிழக சாதி சங்கங்களின் பாதிப்பால் கர்நாடகாவிலும் சாதி சங்கங்கள் புற்றீசல் போல உருவாகி வருகின்றன. இவர்கள் கர்நாடக தமிழர்களை சாதி ரீதியாக கூறு போடுகின்றனர்.

தமிழ்ச் சங்கத்தில் வைக்கப் பட்டுள்ள சாதி தலைவரின் படத்தை உடனடியாக அகற்ற வேண்டும். இல்லாவிடில் தமிழ் அமைப்புகளை ஒருங்கிணைத்து பெரிய அளவில் போராட்டம் நடத்தி, நாங்கள் அகற்றுவோம்" என்றார்.

அமைதிப் போராட்டம்

▲ மாட்டிறைச்சி விவகாரத்தில் நடைபெறும் தாக்குதல்களை கண்டித்து, தேசிய அளவிலான போராட்டத்தின் ஒரு பகுதியாக பெங்களூருவில் நேற்று அமைதிப் போராட்டம் நடைபெற்றது. படம்: பிடிஐ

தமிழகம், புதுச்சேரியில் இடியுடன் கூடிய மழை பெய்யும்

● சின்னகல்லாரில் 13 செமீ மழை பதிவு

சென்னை

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒருசில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப் புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது:

தமிழகம் மற்றும் ஆந்திர கடலோரப் பகுதியில் காற்றழுத்த தாழ்வுநிலை நிலவியது. இது தற்போது ஒடிசா வரை பரவி யுள்ளது. அதன் காரணமாக நேற்று முன்தினம் தமிழகத்தில் பரவலாக மழை பெய்துள்ளது. நேற்று காலை 8.30 மணிக்கு எடுக்கப்பட்ட மழை அளவின்படி, வால்பாறையில் 10 செமீ, பாபநாசம், பெரியார், நீலகிரி, குளச்சலில் தலா 5 செமீ, குழித் துறை, தக்களையில் தலா 4 செமீ, செங்கோட்டை, நாகர்கோவில், பேச்சிப்பாறை, மயிலாடி, பூதபாண்டியில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரி யில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒருசில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

இவ்வாறு அவர் கூறினார்.

பெட்யா வைரஸ் தாக்குதல் மும்பை துறைமுக பணிகள் பாதிப்பு

மும்பை

பெட்யா வைரஸ் தாக்குதலால் மும்பை ஜவஹர்லால் நேரு துறைமுகத்தின் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த துறைமுகத்தின் ஒரு முனையம் பாதிக்கப்பட்டிருப்பதை அரசு உறுதிப்படுத்தி இருக்கிறது.

"மத்திய அரசு நிலைமையை தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இன்னும் சில நாட்களில் துறைமுகம் இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என பிரதமர் அலுவலகத்தின் சைபர் துறை பிரிவு தலைவர் டாக்டர் குல்ஷன் ராய் தெரிவித்தார்.

இந்த தாக்குதல் மேர்ஸ்க் நிறுவனத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலே தவிர இந்தியா மீது நடத்தப்பட்ட தாக்குதல் அல்ல என உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மும்பை துறைமுகத்தின் ஒரு முனையத்தை ஏபி மோலர் மேர்ஸ்க் நிறுவனம் நிர்வகித்து வருகிறது. பெட்யா வைரஸ் தாக்குதலால் தங்களது செயல்பாடுகள் 27-ம் தேதி முதல் பாதிக்கப்பட்டுள்ளதாக ட்விட்டர் தளத்தில் இந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்நிறுவனம் பல நாடுகளில் செயல்பட்டுவருகிறது. சைபர் தாக்குதலால் பல நாடுகளின் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த குழுமம் இந்தியாவில் 80 கோடி டாலர் அளவுக்கு முதலீடு செய்துள்ளது.

இந்தியா தவிர ரஷ்யாவை சேர்ந்த பெரிய எண்ணெய் நிறுவன மான ரேஸ்நெப்ட், சர்வதேச விளம்பர நிறுவனமான டபிள்யூபிபி குரூப், உக்ரைன் மத்திய வங்கி, விமான நிலையம் ஆகியவையும் பெட்யா வைரஸால் பாதிக்கப் பட்டுள்ளன.

அதேபோல உக்ரைன் நாட்டின் மீடியா நிறுவனமும் பாதிக்கப்பட்டி ருக்கிறது. இதனால் நிறுவனத்தின் கணினிகள் முடக்கப்பட்டுள்ளன. இதை சரி செய்வதற்கு 300 டாலர் மதிப்பிலான பிட்காயின் தேவை என சைபர் தாக்குதல் நடத்திய அமைப்பினர் மிரட்டல் விடுத் துள்ளதாகவும் தகவல் வெளியாகி இருக்கிறது.

கறி லீப், சென்னா தால், கீமா உட்பட

ஆக்ஸ்போர்டு அகராதியில் இடம் பிடித்த 240 இந்திய வார்த்தைகள்

லண்டன்

ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில் 240 இந்திய வார்த்தைகள் இடம்பிடித்துள்ளன.

ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியின் 9-வது பதிப்பு நேற்றுமுன்தினம் வெளியிடப் பட்டது. இதில் 900 புதிய ஆங்கில வார்த்தைகள் சேர்க்கப் பட்டுள்ளன. அவற்றில் இந்திய ஆங்கிலத்தில் இருந்து 240 வார்த்தைகள் இடம்பிடித்துள்ளன. அவை பெரும்பாலும் இந்திய உணவுப் பொருட்களாகும்.

கறி லீப் (கறிவேப்பிலை), சென்னா தால் (சுண்டல்), கீமா (வெட்டப்பட்ட இறைச்சி துண்டு கள்), பப்பட் (அப்பளம்) உள்ளிட்ட இந்திய உணவுப் பொருட்கள் ஆக்ஸ்போர்டு அகராதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக ஆக்ஸ்போர்டு அகராதி தயாரிப்பு குழுவைச் சேர்ந்த பேட்ரிக் வொயிட் கூறிய போது, "ஆங்கிலம் ஒரு சர்வதேச மொழியாகும். உலகம் முழுவதும் பல்வேறு மொழிகளைச் சேர்ந்த சொற்கள் ஆங்கிலத்தில் கலந்து துள்ளன. இந்திய உணவுப் பொருட்கள் உலகளாவிய புகழ் பெற்றவை. இதன் காரணமாக அவை தற்போது ஆக்ஸ்போர்டு அகராதியில் இடம்பிடித்துள்ளன" என்று தெரிவித்தார்.



செய்தி: தமிழகத்தில் 110 எண்ணெய் கிணறுகள் அமைக்க ஓஎன்ஜிசி திட்டமிட்டு அதற்காக போலீஸ் பாதுகாப்பு கோரியது.

பஞ்ச்: சர்க்கார் ஐயாமாரே... இதையும் 110 விதியின் கீழ் அறிவிப்பா வெளியிட்டு சமாளிச்சுடுவீங்களே...!

-ஆ.நல்லமுத்து, கோவில்பட்டி.

செய்தி: அமெரிக்காவில் இருப்பது தாய்நாட்டில் இருப்பதுபோல் உள்ளது. – மோடி

பஞ்ச்: ஏன்... அங்கயும் விவசாயிகள் தற்கொலை பண்ணிக்கறாங்களா?

-மருத.வடுகநாதன், வேதாரண்யம்.

செய்தி: சில தனியார் பாலில் கலப்படம் உள்ளதால் மக்கள் 'விழிப்புடன்' இருக்கவும். –ராஜேந்திர பாலாஜி

பஞ்ச்: ஏன்.... இத்தனை நாளும் அரசு 'தூங்கி'க்கிட்டு இருந்ததா?

-பி.நந்தகுமார், காங்கேயம்.

செய்தி: அதிமுக அம்மா அணியில் உள்ளவர்கள் யார் கட்டுப்பாட்டிலும் இல்லை. –செம்மலை

பஞ்ச்: இது மோடி மீது சத்தியம்!

-அபிசேக் மியாவ், நத்தம்.

அரசுப் பள்ளி - அரசுக் கல்லூரி - அரசுப் பணி!

பாஸ்கரன் கிருஷ்ணமூர்த்தி

அதிரடியான கேள்வி ஒன்றை மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் முன் வைத்து இருக்கிறது. "அரசுப் பள்ளி ஆசிரியர்கள், தங்கள் பிள்ளைகளை அரசுப் பள்ளிகளில் சேர்ப்பதை ஏன் கட்டாயம் ஆக்கக் கூடாது?"

'அரசுப் பள்ளிகளில் தரமான கல்வி வழங்கப்பட வேண்டும்; அடித்தட்டு மக்களின் பிள்ளைகள் சிறந்த குடிமகன்களாக உருவாக வழிவகை செய்யப்பட வேண்டும்' என்கிற அக்கறையுடன் மாண்பமை நீதிமன்றம் கேள்வி எழுப்பியிருக்கிறது.

இதனையொட்டியே மேலும் சில கருத்துகளையும் நீதியரசர் தெரிவித்து இருக்கிறார். அரசுப் பள்ளி ஆசிரியர்கள் மட்டுமல்ல; அரசு ஊழியர்கள், அலுவலர்கள் அத்தனை பேருக்குமே இந்தக் கேள்வி நீட்டிக்கப்பட வேண்டியதுதான். உயர் நீதிமன்ற நீதிபதி எழுப்பியுள்ள கேள்வி, முழுக்க முழுக்க நியாயமானதே!

ஆனால், அரசு அலுவலர்கள், ஊழியர்கள், ஆசிரியர்கள், தாங்கள் விரும்பும் பள்ளியில் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைப்பதற்கான எல்லா உரிமையும் உண்டு என்றுதான் தோன்றுகிறது. 'இந்தப் பள்ளியில்தான் சேர்த் தாக வேண்டும்' என்று யாரையும் கட்டாயப்படுத்துவது, அரசிய லமைப்பு சட்ட உரிமைகளுக்கு மாறானது என்றும் கருத இடம்

இருக்கிறது. அரசு ஊழியர் என்பத னாலேயே, பிற குடிமகன்களுக்குக் கிடைக்கும் தனி மனித உரிமைகள் இல்லாமல் போய்விடாது.

மாண்பமை உயர் நீதிமன்றம், விளக்கம் கேட்டு இந்தக் கேள்வியை, தமிழக அரசிடம் முன்வைத்து இருக்கிறது. அரசின் பதில், சட்டப்படியான உரிமைகளை எடுத்துரைக்கும் என்று எதிர் பார்க்கலாம். அதற்கு முன்பாக வேறு ஒரு கேள்வியும் எழுகிறது. இது இன்னமும் பொருத்தமான தாக, சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டதாக, அரசியலமைப்பு சட்ட உரிமைகளை மீறாததாக இருக்க சாத்தியம் உள்ளதாகத் தெரிகிறது.

அரசு பள்ளி மாணவர்களுக்கு சலுகை

பொதுவாக, மிக அதிகக் கட்டணம் செலுத்தி, 'தரமான' தனியார் பள்ளிகளில் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைப்பவர்கள் எல்லாருமே, உயர் கல்வி என்று வரும் போது, அரசுக் கல்லூரிகளையே தேர்வு செய்கின்றனர். அரசு மருத்துவக் கல்லூரி, அரசுப் பொறியியல் கல்லூரி என்றுதானே போட்டிக்கு வருகின்றனர்? அரசுப் பள்ளிகளில் படித்தவர்கள் மட்டுமே, உயர் கல்விக்கு அரசுக் கல்லூரிகளில் விண்ணப்பிக்கலாம் என்று ஏன் ஒரு விதிமுறை கொண்டு வரக் கூடாது? குறைந்த பட்சம், அரசுப் பள்ளி மாணவ / மாணவியருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று சாதாரண, நடைமுறை சார்ந்த அரசாணை பிறப்பித்தாலே போதுமே!

அரசு அலுவலர்கள், ஊழியர்கள், ஆசிரியர்கள் என்று இனம் பிரித்து, தனியார் பள்ளிகளில் சேர்ப்பதற்குத் தடை விதிப்பதில் உள்ள, அடிப்படை உரிமை சார்ந்த சட்டச் சிக்கல்கள் சற்றும் இல்லாத ஒரு எளிய நடைமுறையை ஏன் சிந்தித்துப் பார்க்கக் கூடாது? நன்கு விவரம் தெரிந்த, மக்கள் நலனில் அக்கறை கொண்ட தலைவர்கள் கூட, இந்தக் கோரிக்கையை எழுப்புவதில்லை. அரசாங்கக் கல்வி நிறுவனங்களில் பயின்றவர்கள் மட்டுமே, குடிமைப் பணிகள் (ஐஏஎஸ்) உள்ளிட்ட அரசுப் பணிக்கு வர முடியும் என்று உத்தரவு பிறப்பிக்க முடியாதா?

பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சி, அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களை ஒரு முறையேனும் நேரில் சந்தித்துப் பேசுகிற 'வாய்ப்பு' கிடைக்கிற யாருக்கும் ஓர் உண்மை, சட்டென்று உறைக்கும். இவர்களில் மிகப் பெரும்பாலோரின் பெற்றோர், வறுமையில் சிக்கித் தவிப்பவர்கள். நிலையான வருமானம் அற்றவர்கள். இவர்களுக்கான குறைந்தபட்ச நல்வாழ்வை உறுதிப்படுத்துகிற எந்தவொரு திட்டத்தை நாம் கையில் வைத்து இருக்கிறோம்? தொடக்கப் பள்ளி முதல் உயர் கல்வி வரை அரசு நிறுவனங்களிலேயே படித்து முடித்து விட்டு வெளியே வருகிற, சாமான்யர்களின் பிள்ளைகளுக்கு இன்று நாம் என்ன உதவி செய்து இருக்கிறோம்?

கோரிக்கைகள் நீர்த்துப் போகக் கூடாது

கிராமப்புறங்களில் இருந்து கல்லூரிக்கு, பட்டம் முடித்த பின் பணிச் சந்தைக்கு வரும் எண்ணற்ற, முதல் தலைமுறைப் பட்டதாரி இளைஞர்கள், இளைஞிகளுக்கு நாம் எங்காவது முன்னுரிமை தந்து இருக்கிறோமா? 'அரசுப் பள்ளிகளை ஆதரிக்க வேண்டும்; அரசுப் பள்ளிகளைத் தரம் உயர்த்த வேண்டும்' என்பதெல்லாம் உயரிய நோக்கம் கொண்ட நல்ல கருத்துகள்தாம். ஐயம் இல்லை.

ஆனால் இதனை ஒட்டி எழுப்பப்படுகிற, நடைமுறைக்கு ஒத்துவராத, சட்டப்படி நிராகரிக்கப் படுவதற்கான சாத்தியங்கள் அதிகம் கொண்ட வாதங்கள் எல்லாம், ஒரு மிக நியாயமான கோரிக்கை, நீர்த்துப் போகவே துணை செய்யும். அவர்கள் ஏன் அங்கே இருக்கிறார்கள்? 'இங்கே' ஏன் வரக் கூடாது' என்கிற கேள்விகள் அர்த்தம் உள்ளவைதாம். ஆனாலும், ஏற்கெனவே 'இங்கே' இருப்பவர்களுக்கு என்ன செய்து விட்டோம் என்று சிந்தித்துச், செயல்படுதல், இன்னமும் ஆழமானது. ஆரோக்கியமானது.

'வசதிப்பட்ட' பிள்ளைகளை அரசுப் பள்ளிகளின் பக்கம் திருப்பி விடுவதனால் மட்டும், என்ன பெரிதாகப் பயன் விளைந்து விடப்போகிறது? கீழே இருப்பவர்களைக் கை கொடுத்துத் தூக்கி விடுகிற பணியை முதலில் தொடங்குவது இன்னமும் அறிவுடைமையான செயலாக இருக்கும். 'பெரியவர்கள்' தம் கடைக்கண் பார்வையை, கடைக்கோடிப் பக்கமும் திருப்பினால் நன்றாக இருக்கும்.

7-வது ஊதியக் குழு அலவன்ஸ் பரிந்துரைக்கு ஒப்புதல்

புதுடெல்லி

ஏழாவது ஊதியக் குழுவின் அலவன்ஸ் தொடர்பான பரிந்துரைகளுக்கு மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் அளித்தது.

ஏழாவது ஊதியக் குழு 197 வகையான அலவன்ஸ்கள் குறித்து ஆய்வு செய்து 53 அலவன்ஸ்களை ரத்து செய்ய வும் 37 அலவன்ஸ்களை இணைக் கவும் பரிந்துரை செய்தது. இதுதொடர்பாக பல்வேறு துறைகளின் செயலாளர்கள் அடங்கிய சிறப்புக் குழு ஆய்வு செய்து கடந்த 1-ம் தேதி தனது அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பித்தது.

இந்த அறிக்கை குறித்து டெல்லியில் நேற்று நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இறுதி யில் 34 திருத்தங்களுடன் 7-வது ஊதியக் குழுவின் அலவன்ஸ் பரிந்துரைகளுக்கு அமைச் சரவை ஒப்புதல் அளித்தது.

அதன்படி வீட்டு வாடகைப்படி உட்பட பல்வேறு அலவன்ஸ்கள் உயர்கின்றன. இந்த அலவன்ஸ் உயர்வு வரும் ஜூலை 1-ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. இதனால் மத்திய அரசு ஊழியர்கள் 34 லட்சம் பேரும் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 14 லட்சம் பேரும் பலன் அடைவார்கள். மத்திய அரசுக்கு ஆண்டுக்கு ரூ.30,748 கோடி கூடுதலாக செலவாகும்.